

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூர் பகுதியில் முன்னாள் அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி களப்பணியில் ஈடுபட்டனர். உடன் தூத்துக்குடி மாநகராட்சி செயலாளர் ஆனந்தசேகரன் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பி.அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கு தாராபுரம் அட்டவணை பள்ளிவாசல் எனும் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினரை சந்தித்தும், தொழுகைக்கு வந்த இஸ்லாமிய பெருமக்களிடமும் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.உடன் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் ஏ.எல்.பி.தினேஷ் உள்ளார்.


### தமிழ்நாடு காவல்துறைக்கு கரூரில் கட்டுப்படாத விஜய்,லண்டன்

# காவல்துறையிடம் குட்டு வாங்கி சென்னை திரும்ப வேண்டுமா ?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு சாடல்!

நெல்லை.செப்.20-

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு முறைப் பயணமாக வெளிநாடுகளுக்கு செல்லும் போதெல்லாம் அங்குள்ள தமிழர்களை சந்திக்க தனி நேரம் ஒதுக்கத் தவறிய தில்லை.வட அமெரிக்காவில் FEDNA உள்ளிட்ட தமிழ் அமைப்புகளின் பிரமாண்ட வரவேற்பை ஏற்று, அவர்களுடன் கலந்துரையாடினார். அதேபோல் லண்டனிலும் தமிழ் உறவுகளைச் சந்தித்து,அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். பதவியின் உச்சத்தில் இருந்தாலும், உலகெங்கும் வாழும் தமிழர்களைத் தன் உறவுகளாக



அரவணைக்கும் பண்பும், பாசமும் கொண்டவர். மு.க.ஸ்டாலின் அவர்கள். என சட்டபேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் தனது பதிவில் கூறியிருப்பதாவது.

லண்டன் சென்ற முதல்வர் எந்த அனுமதியும் பெறாமல் லண்டன் வாழ் தமிழர்களை சந்திப்பதாக ரீல்ஸ் மூலம் விளம்பர படுத்தி தமிழர்களை இவர் தங்கியிருந்த விடுதிக்கு முன் கூட வைத்து போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதால், லண்டன் காவல்துறை “உங்கள் CM” இந்தியா செல்ல முடியாது என்று கடும் எச்சரிக்கை விடுத்த நிலையில் முதல்வரின் பாதுகாவலர் ஒலிபெருக்கி மூலம் விஜய் உங்களை சந்திக்க விரும்பவில்லை திரும்பி போய் விடுங்கள் என்று லண்டன் வாழ் தமிழர்களை அவமானபடுத்தியும், தமிழ்நாடு காவல்துறைக்கு கரூரில் கட்டுப்படாத விஜய், லண்டன் காவல்துறையிடம் குட்டு வாங்கி அவமானப்பட்டு சென்னை திரும்ப வேண்டுமா CM சார்?

தமிழ்நாட்டில் 32 இடங்களில் செயல்பட்டு வரும் ஒரு நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்ய லண்டன் சென்றது போல் சென்னை நடிகரை கட்டி தழுவ லண்டன் சென்றது வெட்ககேடானது. தமிழ்நாட்டின் தரத்தையும்,முதலமைச்சர் பதவியையும் அவமரியாதை செய்யும் முதல்வரே உமக்கு இந்த பதவி ஒரு கேடா CMsir ?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# புதிய தலைமைச் செயலகம் பட்டினப்பாக்கத்தில் அமைக்க கடும் எதிர்ப்பு!

## த.வெ.க. அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்!

சென்னை, செப்.20-

மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவுடன்தான் த.வெ.க. ஆட்சி நடைபெறுகிறது என்பதை அவர்கள் உணராவிட்டால், தங்களது முடிவு வேறு மாதிரி இருக்கும் என்று மாநில செயலாளர் பெ. சண்முகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மார்க்சிஸ்ட் கயம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சென்னை பட்டினப்பாக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, புதிய தலைமைச் செயலகத்திற்காக வெளியிடப்பட்ட அரசாணையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அப்போது பேசிய பெ.சண்முகம், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் விவகாரத்தில் தவெக அரசு ஆணவத்துடனும், பிடிவாதத்தோடும் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்று கூறினார்.

இதையடுத்து, செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், விஜய் கட்சிக்கு 34 சதவீத மக்கள்தான் வாக்களித்துள்ளார்கள் என்றும், தங்கள் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி நடைபெறுவதை அரசு உணராவிட்டால், தங்களது முடிவு வேறு மாதிரி இருக்கும் என்றும் எச்சரித்தார்.

### விண்ணை முட்டும் காய்கறி விலை!

# தமிழ்நாட்டில் அரிசி விலை கிடுகிடு உயர்வு!

## விலை உயர்வால் ஏழை எளிய மக்கள் கடும் பாதிப்பு!

சென்னை, செப்.20-

தமிழ்நாட்டில் அரிசி விலை 25 முதல் 30 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

த.வெ.க ஆட்சி பொறுப் பேற்ற நாள் முதல், அதன் நிர்வாகச் சீர்கேட்டால், ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டின் பணவீக்கம் ராக்கெட் வேகத்தில் எகிறுகிறது.. அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி என அத்தியா வசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டுகிறது. இந்நிலையில், தமிழ்நாட்டில் அரிசி விலை 25 முதல் 30 சதவீதம் உயர்ந்துள்ளது.

சென்னையில் 26 கிலோ பொன்னி அரிசி ஆயிரத்து 800 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதேபோல் 26 கிலோ இட்லி அரிசி ஆயிரத்து 40 ரூபாய்க்கும், 26 கிலோ சன்னரக அரிசி ஆயிரத்து 600 ரூபாய்க்கும், 25 கிலோ பிராண்டு பொன்னி அரிசி ஆயிரத்து 450 ரூபாய் முதல் ஆயிரத்து 550 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது. அரிசி விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.



விளாத்திகுளத்தில் வசந்த் & கோ புதிய கிளை திறப்பு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு வாழ்த்தினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாராமன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### சிவகங்கை இரட்டை கொலையில்

# அரசு வேலைகேட்டு ஆட்சியர் அலுவலகம் முன் காத்திருப்புப் போராட்டம்!

## சிவகங்கையில் பரபரப்பு!

சிவகங்கை, செப். 20-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தாலுகா காயாஓடை புது குடியிருப்பைச் சேர்ந்தவர் தெய்வேந்திரன் வயசு 27. சிறுவேலங்குடியைச் சேர்ந்தவர் பூப்பாண்டி.25 .இவர்கள் இருவரும் இரண்டு தினங்களுக்குமுன் சிவகங்கை தாலுகா பையூர் கொடிக்காடு கிராமத்தில் உள்ள கண்மாய் கரையில் உட்கார்ந்து மது அருந்தி கொண்டிருந்தார்கள் அப்பொழுது 10 பேர் கொண்ட ஒரு கும்பல் தெய்வேந்திரன்,பூப்பாண்டி ஆகிய இருவரையும் ஓட ஓட விரட்டி பல இடங்களில் வெட்டி தலையை சிதைத்து விட்டு இரண்டு பேரையும் கொலை செய்துவிட்டு தெய்வேந்திரன் வந்த காரையும் சேதப்படுத்திவிட்டு தப்பி ஓடி விட்டார்கள். இது தொடர்பாக சிவகங்கைநகர் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். கொலை செய்யப்பட்ட இருவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். சிவகங்கை டி.எஸ். பிஅமல ஆடவின்தலைமையில் 5 தனிப்படை போலிஸ் அமைக்கப்பட்டது.தனி போலீஸ் படையினர்சிவகங்கை தாலுகா பில்லூரரைச் சேர்ந்த பாலமுருகன் வயசு 24 ,தன்ராஜ் 19, சந்தோஷ் 19 ,மாத்தூர் சதீஷ்குமார் 25, அலுபிள்ளை தாங்கி காளீஸ்வரன் 23 ஆகிய ஐந்து பேரை கைது செய்தனர். இந்த கொலை தொடர்பாக மேலும் சிலரை தேடி வருகிறார்கள். இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட தெய்வேந்திரன் ,பூப்பாண்டிஉடல் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது .இந்த கொலை குறித்து உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய கோரியும் கொலை செய்யப்பட்ட குடும்பத்தாருக்கு அரசு வேலை, மற்றும் ரூபாய் ஒரு கோடி நஷ்டஈடு கேட்டு சிவகங்கை நகர் அரண்மனை வாசலில் தெய்வேந்திரன் பூலிப்பாண்டி உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். சுமார் 3 மணி நேரத்திற்கு மேலாக போராட்டம் நடைபெற்றது.பஸ்நிலையம் அருகில் போராட்டம் நடைபெற்றதால் மாற்று பாதையில் பேருந்துகள் இயக்கப்பட்டது.

சிவகங்கை கோட்டாட்சியர் செல்வி ஜெபி கிரேசியா சாலைமறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார் . இது குறித்து உரிய நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து பேசி எடுப்ப தாக உறுதி கூறிய தன் பேரில் சாலைமறியல் போராட்டம் கைவிடப்பட்டது. ஆனால் உறவினர்கள் உண்மையான குற்றவாளி கைது செய்யப்பட வேண்டும் என்று கூறி வந்தார்கள். இந்நிலையில் நேற்று 19ம்தேதி சனிக்கிழமை காலை 8:00 மணி முதல் சிவகங்கைமாவட்ட ஆட்சியர் நுழைவாயில் முன்பாக யாதவ மகாசபை சார்பில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட காயாஒடை, சிறுவேலங்குடி, காளையார் கோவில் மற்றும் பல்வேறு கிராமங்களை சேர்ந்தவர்கள் கலெக்டர் அலுவலகம்நுழைவாயிலில் அமர்ந்து காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பகல் 2.00மணி வரை எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. தொடர்ந்து காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் இச்சம்பவம் சிவகங்கை மற்றும் காளையார்கோவில் பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த இரட்டை கொலை குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் உண்மையான குற்றவாளிகளை போலிசார் கைது செய்யக்கோரியும் கொலை செய்யப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி கழக அலுவலகம் முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருஉருவ படத்திற்கு மாவட்ட துணை செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. ஆ.வெங்கடேசன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசன், மாநில நிர்வாகிகள் ஆர்.கணேசன், கலை கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சிறைச்செல்வன், பால ராஜேந்திரன், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மருது பாண்டியன், பாண்டியராஜன், கௌரிசங்கர், பேரூர் செயலாளர்கள் மு.பால்பாண்டியன், சத்திய பிரகாஷ், ஜெயராமன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.





பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி மாநகர தி.மு.க.வின் சார்பில், திருத்தங்கல்லில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமையில் மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் பகுதி கழக செயலாளர்கள் கருணாநிதிபாண்டியன், அ. செல்வம், மாரீஸ்வரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பாலகங்காதரன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் சண்முகராாசன்,
மண்டலக்குழு தலைவர் குருசாமி, மாநகர பொருளாளர் வெள்ளத்துறைப்பாண்டி, மாமன்ற உறுப்பினர்கள் சேதுராமன், முனைவர் சிரிநிகா,மாரீஸ்வரன் மாநகர மகளிர் அணி தமிழரசி, பொறியாளர் அணி செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி இராஜேஸ் ஆகியோர் இருந்தனர்.